**நாமக்கல் முதன்மை மாவட்ட நீதிமன்றம்**
**நாமக்கல் மாவட்ட சிவில் நீதித்துறை அலகில் உள்ள பல்வேறு காலி பணியிடங்களை நிரப்பும் பொருட்டு தகுந்த நபர்களை தேர்ந்தெடுப்பதற்கான விளம்பர அறிக்கை**
**(மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற நீதிப் பேராணை W.P.No.22612/2010, dt.2.8.2012, W.A.No.1027/2013, நாள்.09.06.2014 உத்தரவின்படி மற்றும் அரசாணை (நிலை) எண்.44, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (டி2) துறை, நாள்.11.03.2015 வழிகாட்டுதலின்படி)**

நாமக்கல் மாவட்ட சிவில் நீதித்துறை அலகில் தமிழ்நாடு நீதித்துறை அமைச்சுப் பணி, தமிழ்நாடு பொது மற்றும் சார்நிலைப் பணி மற்றும் தமிழ்நாடு அடிப்படை பணியில் காலியாக உள்ள கீழே பட்டியலிடப்பட்டுள்ள பதவிகளுக்கு நியமனம் செய்யும் பொருட்டு தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. தகுதி வாய்ந்த நபர்கள் உரிய சான்றிதழ்களின் நகல்களை சுய சான்றொப்பத்துடன் (Self Attestation), இணைத்து தபால் மூலம் கீழே குறிப்பிடப்பட்ட உரிய படிவத்தில் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பங்கள் பதிவு தபால் மூலம் மட்டுமே அனுப்பப்பட வேண்டும். சான்றிதழ்கள் சரிபார்த்தலின் அடிப்படையில் தகுதி வாய்ந்த நபர்கள் இந்த தேர்ந்தெடுக்கும் முறைக்கான அடுத்த கட்டத்தில் பங்கேற்க இந்நீதிமன்ற இணையதள வலைதளத்தின் மூலம் அழைக்கப்படுவார்கள்.

| **(I) பதவியின் பெயர்** | **கணிணி இயக்குபவர்**<br>(தமிழ்நாடு நீதித்துறை அமைச்சுப்பணி விதி 16(a)(i)ன் படி முற்றிலும் தற்காலிகமானது) |
|---|---|
| ஊதிய விகிதம் | நிலை 10 (ரூ.20600 – 65500 + இதர படிகள் நடப்பிலுள்ள விதிகளின்படி) |
| கல்வித் தகுதி | அங்கீகரிக்கப்பட்ட ஏதாவதொரு பல்கலைக்கழகத்தில் கணிணி அறிவியலில் (Computer Science/Computer Applications) இளங்கலைப் பட்டம் அல்லது இளங்கலைப்பட்டம் - பி.ஏ. (அல்லது) பி.எஸ்.சி (அல்லது) பி.காம். உடன் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் கணிணியில் பட்டயப்படிப்பு. |
| தொழில்நுட்பத் தகுதி | அரசுத் தொழில்நுட்பத் தட்டச்சு தேர்வில் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் இளநிலை தேர்ச்சி |
| காலிப்பணியிடங்கள் | 4 (நான்கு) |
| இன சுழற்சி | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் & சீர்மரபினர் (முன்னுரிமையற்றவர்) (பெண்கள்-ஆதரவற்ற விதவை) -1 |
| | பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லீம் தவிர) (முன்னுரிமையற்றவர்) -1 |
| | பொது (முன்னுரிமையற்றவர்) - 1 |
| | ஆதி திராவிடர் (முன்னுரிமையற்றவர்) (பெண்கள்-ஆதரவற்ற விதவை) - 1 |

| **(II) பதவியின் பெயர்** | **முதுநிலை கட்டளை நிறைவேற்றுனர்** |
|---|---|
| ஊதிய விகிதம் | நிலை 8 (ரூ.19500- 62000 + இதர படிகள் நடப்பிலுள்ள விதிகளின்படி) |
| கல்வித் தகுதி | குறைந்தபட்ச பொதுக்கல்வித் தகுதி அதாவது பள்ளியிறுதி வகுப்பு (பத்தாம் வகுப்பு) அல்லது அதற்கு சமமான கல்வியில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். |
| காலிப்பணியிடங்கள் | 1 (ஒன்று) |
| இன சுழற்சி | பொது (முன்னுரிமையற்றவர்) (பெண்கள் - ஆதரவற்ற விதவை) -1 |

*...p.t.o.*

| (III) பதவியின் பெயர் | **இளநிலை கட்டளை நிறைவேற்றுனர்** |
|---|---|
| ஊதிய விகிதம் | நிலை 7 (ரூ.19000 - 60300 + இதர படிகள் நடப்பிலுள்ள விதிகளின்படி) |
| கல்வித் தகுதி | குறைந்தபட்ச பொதுக்கல்வித் தகுதி அதாவது பள்ளியிறுதி வகுப்பு (பத்தாம் வகுப்பு) அல்லது அதற்கு சமமான கல்வியில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். |
| காலிப்பணியிடங்கள் | 10 (பத்து) |
| இன சுழற்சி | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் & சீர்மரபினர் (முன்னுரிமையற்றவர்) (பெண்கள்-ஆதரவற்ற விதவை) -1 |
| | பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லீம் தவிர) (முன்னுரிமையற்றவர்) (பெண்கள்-ஆதரவற்ற விதவை) -1 |
| | பொது (முன்னுரிமையற்றவர்) -2 |
| | பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லீம் தவிர) (முன்னுரிமையற்றவர்) – 2 |
| | ஆதி திராவிடர் (முன்னுரிமையற்றவர்) (பெண்கள்-ஆதரவற்ற விதவை) – 1 |
| | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் & சீர்மரபினர் (முன்னுரிமையற்றவர்) -1 |
| | பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லீம்) (முன்னுரிமை பெற்றவர்) -1 |
| | ஆதி திராவிடர் (முன்னுரிமையற்றவர்) – 1 |

| (IV) பதவியின் பெயர் | ஓட்டுநர் |
|---|---|
| ஊதிய விகிதம் | நிலை 8 (ரூ.19500 - 62000 + இதர படிகள் நடப்பிலுள்ள விதிகளின்படி) |
| கல்வித் தகுதி | 8 ம் வகுப்பில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். |
| தொழில் நுட்பத் தகுதி | மோட்டார் வாகனச் சட்டம், 1939 ன் கீழ் உரிய ஓட்டுநர் உரிமம் பெற்றிருக்க வேண்டும். குறைந்தது ஐந்து ஆண்டுகள் ஓட்டுநர் தொழிலில் முன் அனுபவம் பெற்றிருக்க வேண்டும். |
| காலிப்பணியிடங்கள் | 1 (ஒன்று) |
| இன சுழற்சி | பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லீம் தவிர) (முன்னுரிமை பெற்றவர்) -1 |

| (V) பதவியின் பெயர் | **ஜெராக்ஸ் மெசின் ஆப்பரேட்டர்** |
|---|---|
| ஊதிய விகிதம் | நிலை 3 (ரூ.16600 - 52400 + இதர படிகள் நடப்பிலுள்ள விதிகளின்படி) |
| கல்வித் தகுதி | குறைந்தபட்ச பொதுக்கல்வித் தகுதி அதாவது பள்ளியிறுதி வகுப்பு (பத்தாம் வகுப்பு) அல்லது அதற்கு சமமான கல்வியில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். |
| தொழில் நுட்பத் தகுதி | குறைந்தது ஆறு மாதங்கள் ஜெராக்ஸ் மெசின் இயக்கும் அனுபவம் பெற்றிருக்க வேண்டும். (அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்) |
| காலிப்பணியிடங்கள் | 7 (ஏழு) |
| இன சுழற்சி | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் & சீர்மரபினர் (முன்னுரிமையற்றவர்) (பெண்கள்-ஆதரவற்ற விதவை) – 1 |
| | ஆதி திராவிடர் (முன்னுரிமையற்றவர்) (பெண்கள் - ஆதரவற்ற விதவை) – 1 |
| | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் & சீர்மரபினர் (முன்னுரிமையற்றவர்) – 2 |
| | பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லீம் தவிர) (முன்னுரிமையற்றவர்) – 1 |
| | பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லீம்) (முன்னுரிமை பெற்றவர்) - 1 |
| | ஆதி திராவிடர் (முன்னுரிமையற்றவர்) - 1 |

*...p.t.o.*

| (VI) பதவியின் பெயர் | அலுவலக உதவியாளர் |
|---|---|
| ஊதிய விகிதம் | நிலை 1 (ரூ.15700 - 50000 + இதர படிகள் நடப்பிலுள்ள விதிகளின்படி) |
| கல்வித் தகுதி | 8 ம் வகுப்பில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். |
| காலிப்பணியிடங்கள் | 11 (பதினொன்று) |
| இன சுழற்சி | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் & சீர்மரபினர் (முன்னுரிமையற்றவர்) (ஆர்த்தோ) – 1 |
| | பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லீம் தவிர) (முன்னுரிமையற்றவர்) – 2 |
| | பொது (முன்னுரிமையற்றவர்) – 2 |
| | ஆதி திராவிடர் (தமிழ் வழி) (முன்னுரிமையற்றவர்) (பெண்கள்) – 1 |
| | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் & சீர்மரபினர் (முன்னுரிமையற்றவர்) (பெண்கள்) – 1 |
| | பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லீம் தவிர) (தமிழ் வழி) (முன்னுரிமையற்றவர்) (பெண்கள்) – 1 |
| | பொது (முன்னுரிமையற்றவர்) (பெண்கள்) – 1 |
| | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் & சீர்மரபினர் (தமிழ் வழி) (முன்னுரிமையற்றவர்) – 1 |
| | பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லீம் தவிர) (முன்னுரிமை பெற்றவர்) – 1 |

| (VII) பதவியின் பெயர் | மசால்சி |
|---|---|
| ஊதிய விகிதம் | நிலை 1 (ரூ.15700 - 50000 + இதர படிகள் நடப்பிலுள்ள விதிகளின்படி) |
| கல்வித் தகுதி | தமிழில் எழுதப் படிக்கத் தெரிந்திருக்க வேண்டும் |
| காலிப்பணியிடங்கள் | 6 (ஆறு) |
| இன சுழற்சி | பொது (தமிழ் வழி) (முன்னுரிமையற்றவர்) (முன்னாள் இராணுவ வீரர்) – 1 |
| | ஆதி திராவிடர் (அருந்ததியர்) (முன்னுரிமையற்றவர்) – 1 |
| | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் & சீர்மரபினர் (முன்னுரிமையற்றவர்) – 1 |
| | பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லீம் தவிர) (முன்னுரிமையற்றவர்) – 1 |
| | பொது (முன்னுரிமை பெற்றவர்) – 1 |
| | ஆதி திராவிடர் (முன்னுரிமை பெற்றவர்) – 1 |

| (VIII) பதவியின் பெயர் | இரவுக் காவலர் |
|---|---|
| ஊதிய விகிதம் | நிலை 1 (ரூ.15700 - 50000 + இதர படிகள் நடப்பிலுள்ள விதிகளின்படி) |
| கல்வித் தகுதி | தமிழில் எழுதப் படிக்கத் தெரிந்திருக்க வேண்டும் |
| காலிப்பணியிடங்கள் | 10 (பத்து) |
| இன சுழற்சி | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் & சீர்மரபினர் (முன்னுரிமையற்றவர்) (பெண்கள் - ஆதரவற்ற விதவை) – 1 |
| | பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லீம் தவிர) (முன்னுரிமையற்றவர்) (பெண்கள் - ஆதரவற்ற விதவை) - 1 |
| | பொது (முன்னுரிமையற்றவர்) – 1 |
| | ஆதி திராவிடர் (முன்னுரிமையற்றவர்) (பெண்கள் - ஆதரவற்ற விதவை) – 1 |
| | பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லீம் தவிர) (தமிழ் வழி) (முன்னுரிமையற்றவர்) (பெண்கள்) - 1 |
| | பொது (தமிழ் வழி) (முன்னுரிமையற்றவர்) (பெண்கள்) – 1 |
| | பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லீம் தவிர) (முன்னுரிமை பெற்றவர்) - 1 |
| | பொது (முன்னுரிமை பெற்றவர்) – 1 |
| | ஆதி திராவிடர் (முன்னுரிமையற்றவர்) – 1 |
| | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் & சீர்மரபினர் (தமிழ் வழி) (முன்னுரிமையற்றவர்) (பெண்கள்) – 1 |

| (IX) பதவியின் பெயர் | துப்புரவு பணியாளர் |
|---|---|
| ஊதிய விகிதம் | நிலை 1 (ரூ.15700 - 50000 + இதர படிகள் நடப்பிலுள்ள விதிகளின்படி) |
| கல்வித் தகுதி | தமிழில் எழுதப் படிக்கத் தெரிந்திருக்க வேண்டும் |
| காலிப்பணியிடங்கள் | 4 (நான்கு) |
| இன சுழற்சி | ஆதி திராவிடர் (அருந்ததியர்) (முன்னுரிமை பெற்றவர்) (பெண்கள்- ஆதரவற்ற விதவை) – 1 |
| | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் & சீர்மரபினர் (முன்னுரிமை பெற்றவர்) – 1 |
| | பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லீம் தவிர) (முன்னுரிமை பெற்றவர்) - 1 |
| | பொது (முன்னுரிமையற்றவர்) (பெண்கள்- ஆதரவற்ற விதவை) – 1 |

| (X) பதவியின் பெயர் | சுகாதார பணியாளர் |
|---|---|
| ஊதிய விகிதம் | நிலை 1 (ரூ.15700 - 50000 + இதர படிகள் நடப்பிலுள்ள விதிகளின்படி) |
| கல்வித் தகுதி | தமிழில் எழுதப் படிக்கத் தெரிந்திருக்க வேண்டும் |
| காலிப்பணியிடங்கள் | 3 (மூன்று) |
| இன சுழற்சி | பொது (முன்னுரிமை பெற்றவர்) – 1 |
| | ஆதி திராவிடர் (அருந்ததியர்) (முன்னுரிமை பெற்றவர்) (பெண்கள்- ஆதரவற்ற விதவை) – 1 |
| | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் & சீர்மரபினர் (முன்னுரிமை பெற்றவர்) – 1 |

<u>**வயது தகுதி: 01.07.2019 அன்று**</u>

| வ. எண். | பதவியின் பெயர் | குறைந்தபட்ச வயது (முடிந்திருக்க வேண்டும்) | அதிகபட்ச வயது (முடிந்திருக்க கூடாது) | | |
|---|---|---|---|---|---|
| | | | ஆதி திராவிடர், ஆதிதிராவிடர் (அருந்ததியர்கள்) மற்றும் பழங்குடி வகுப்பினர் | மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லீம்) | ஏனையோர் (அதாவது ஆ.தி., ஆ.தி.(அ), ப.வ., மி.பி.வ./சீ.ம., பி.வ. மற்றும் பி.வ.(மு) ஆகிய வகுப்பினைச் சாராதவர்கள் |
| 1. | கணிணி இயக்குபவர் | 18 வயது | 35 வயது | 32 வயது | 30 வயது |
| 2. | ஜெராக்ஸ் மெசின் ஆப்பரேட்டர் | | 35 வயது | 32 வயது | 30 வயது |
| 3. | ஓட்டுநர் | | 33 வயது | 33 வயது | 28 வயது |
| 4. | முதுநிலை கட்டளை நிறைவேற்றுனர் | | 35 வயது | 32 வயது | 30 வயது |
| 5. | இளநிலை கட்டளை நிறைவேற்றுனர் | | | | |
| 6. | அலுவலக உதவியாளர் | | 35 வயது | 30 வயது | 30 வயது |
| 7. | மசால்சி | | | | |
| 8. | இரவுக் காவலர் | | | | |
| 9. | துப்புரவு பணியாளர் | | | | |
| 10. | சுகாதார பணியாளர் | | | | |

(வயது வரம்பு சலுகைகள் நடைமுறையிலுள்ள அரசு ஆணைகள் அரசு விதிமுறைகளின் படி செயல்படுத்தப்படும்)

*..p.t.o.*

**<u>தேர்வு செய்யும் முறை:</u>**

| வ.எண். | பதவியின் பெயர் | தேர்வு முறை |
|---|---|---|
| 1. | கணிணி இயக்குபவர் | எழுத்துத் தேர்வு, செய்முறை தேர்வு மற்றும் நேர்முகத்தேர்வு |
| 2. | ஜெராக்ஸ் மெசின் ஆப்பரேட்டர் | |
| 3. | ஓட்டுநர் | |
| 4. | முதுநிலை கட்டளை நிறைவேற்றுனர் | எழுத்துத் தேர்வு மற்றும் நேர்முகத்தேர்வு |
| 5. | இளநிலை கட்டளை நிறைவேற்றுனர் | |
| 6. | அலுவலக உதவியாளர் | |
| 7. | மசால்சி | |
| 8. | இரவுக் காவலர் | |
| 9. | துப்புரவு பணியாளர் | |
| 10. | சுகாதார பணியாளர் | |

**<u>விண்ணப்பிக்க கடைசி நாள்:</u>**

விண்ணப்பங்கள் (ஒரு பாஸ்போர்ட் அளவு புகைப்படம் உரிய இடத்தில் ஒட்டப்பட்டு கையொப்பத்துடன்) அனைத்து கல்விச் சான்றிதழ்கள், ஜாதி சான்றிதழ் மற்றும் முன்னுரிமைக்கான சான்றிதழ்கள் (ஊனமுற்றோர், ஆதரவற்ற விதவை, கலப்புத் திருமணம் மற்றும் பிற) மற்றும் ஏனைய சான்றிதழ்களின் நகல்கள் உரிய சுய சான்றொப்பத்துடன் (Self attestation) கீழ்க்காணும் முகவரிக்கு **<u>29.04.2019</u> ம் தேதி மாலை <u>06:00</u>** க்குள் கிடைக்குமாறு **பதிவுத் தபாலில் மட்டுமே அனுப்ப வேண்டும்.**

**முதன்மை மாவட்ட நீதிபதி,**
**முதன்மை மாவட்ட நீதிமன்றம்,**
**நாமக்கல் மாவட்டம்-637 003.**

(<u>காலதாமதமாக வரும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் பரிசீலிக்கப்படமாட்டாது</u>)

மேற்கண்ட நியமனத்திற்கு தகுதியான நபர்களை தேர்வு செய்யவோ, நேர்காணலை ஒத்தி வைக்கவோ, நியமன அறிக்கையை எவ்வித முன்னறிவிப்பும் இன்றி ரத்து செய்யவோ முதன்மை மாவட்ட நீதிபதி, நாமக்கல் அவர்களுக்கு முழு அதிகாரம் உள்ளது. இத்துடன் தெரிவிக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரையை தவறாது படித்து பின்பற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். சொல்லப்பட்டுள்ள அறிவுரைகள் பின்பற்றப்படாமல் இருக்கும்பட்சத்தில், விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் முற்றிலும் நிராகரிப்புக்கு உள்ளாக்கப்படும்.

ஒம்/-K.H.இளவழகன்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
முதன்மை மாவட்ட நீதிமன்றம்,
நாமக்கல்.

இடம்: நாமக்கல்.
நாள்: 1.4.2019

<u>குறிப்பு:</u>

**நாமக்கல் மாவட்ட சிவில் நீதித்துறையில் காலியாக இருந்த 18 அலுவலக உதவியாளர் காலி பணியிடங்களை நிரப்பும் பொருட்டு கடந்த 30.10.2017 தேதியில் நாமக்கல் மாவட்ட e-courts வலைதளத்தில் அறிவிப்பு வெளியிடப்பட்டு, 29.4.2018 தேதியில் நேர்முகத் தேர்வு நடைபெறும் என்றும் அறிவிப்பு நாமக்கல் மாவட்ட e-courts வலைதளத்தில் கடந்த 5.4.2018 தேதியில் வெளியிடப்பட்டிருந்தது.**

**இச்சூழ்நிலையில், தவிர்க்க முடியாத நிர்வாக காரணங்களினால், மேற்சொன்ன 18 அலுவலக உதவியாளர் காலி பணியிடங்களை நிரப்புவதற்காக 29.4.2018 தேதியில் நடத்தப்படுவதாக இருந்த நேர்முகத் தேர்வு தள்ளி வைக்கப்பட்டது. இந்த தகவல் நாமக்கல் மாவட்ட e-courts வலைதளத்தில் கடந்த 25.4.2018 தேதியில் வெளியிடப்பட்டது.**

**எனவே, கடந்த 29.4.2018 தேதியில் நடக்கவிருந்ததாக சொல்லப்பட்ட மேற்சொன்ன 18 அலுவலக உதவியாளர் காலி பணியிடங்களை நிரப்புவதற்கான நேர்முகத் தேர்வும், இந்த ஆட்சேர்ப்பு தேர்வு முறை நடைபெறும் போது மேற்கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.**

*****

**<u>விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகள்</u>**

1. விண்ணப்பங்கள் வரையறுக்கப்பட்ட படிவத்தில் பூர்த்தி செய்யப்பட்டு (உரிய படிவம் இந்நீதிமன்ற இணையதள வலைதளத்திலிருந்து பதவிறக்கம் செய்யவும்) **<u>பதிவுத்தபால்</u>** மூலமாக மட்டுமே அனுப்பப்பட வேண்டும். வேறு வகையில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

2. ஒரு தபால் உறையில் ஒரு விண்ணப்பம் மட்டுமே அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பதாரர் ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பம் செய்ய நேர்ந்தால், தனித்தனி விண்ணப்பங்கள் தனித்தனி தபால் உறையில் அனுப்ப வேண்டும். தவறும் பட்சத்தில், விண்ணப்பங்கள் முற்றிலும் நிராகரிக்கப்படும்.

3.விண்ணப்பங்களை அனுப்பும் தபால் உறையின் மேல்பகுதியில் மற்றும் விண்ணப்பத்தின் உரிய இடத்தில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். தவறும் பட்சத்தில், விண்ணப்பம் முற்றிலும் நிராகரிக்கப்படும்.

4.பாஸ்போர்ட் அளவு புகைப்படம் விண்ணப்த்தின் உரிய இடத்தில் ஒட்டப்பட்டு, புகைப்படத்தின் மேல் விண்ணப்பதாரர் கையொப்பம் இட வேண்டும். மேலும் உரிய சான்றிதழ்களின் நகல்கள் சுய சான்றொப்பம் (Self Attestation) செய்து விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். எக்காரணம் கொண்டும் அசல் சான்றிதழ்களை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பக் கூடாது. இருப்பினும், நேர்முகத் தேர்விற்கு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள், நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ளும் போது அனைத்து அசல் சான்றிதழ்கள் மற்றும் ஆளறிச் சான்றிதழுடன் கலந்து கொள்ள வேண்டும். உரிய சான்றிதழ்களின் சுயசான்றொப்பமிட்ட நகல்கள் இணைக்கப்படாத விண்ணப்பங்கள் எவ்வித முன்னறிவிப்புமின்றி முற்றிலும் நிராகரிக்கப்படும்.

5.முழுமையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் மற்றும் தவறான தகவல்கள் கொண்டுள்ள விண்ணப்பங்கள் முற்றிலும் நிராகரிக்கப்படும்.

6.விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் தகவல்கள் தவறானவை என தெரியவரும் பட்சத்தில், அவ்விண்ணப்பதாரரின் விண்ணப்பம், முற்றிலும் நிராகரிக்கப்படும்.

7.முன்னுரிமை கோரும் நேர்வுகளில், முன்னுரிமைக்கான உரிய சான்றிதழ்களின் நகல்கள் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும். தவறும்பட்சத்தில் விண்ணப்பம் முற்றிலும் நிராகரிக்கப்படும்.

8.தமிழ்வழிக் கல்விக்காக ஒதுக்கப்பட்ட இனசுழற்சி முறைக்கு, தமிழ்வழிக் கல்வி பற்றிய தகவல்கள் விண்ணப்பத்தின் உரிய இடத்தில் பூர்த்தி செய்து, உரிய சான்றிதழ்களின் நகல்கள் இணைக்கப்பட வேண்டும். தவறும்பட்சத்தில் விண்ணப்பம் முற்றிலும் நிராகரிக்கப்படும்.

9.விண்ணப்பதாரர் தனது இருப்பிடச் சான்று குறித்து (i) ஆதார் அட்டை, (ii) வாக்காளர் அடையாள அட்டை, (iii) ஓட்டுநர் உரிமம், (iv) குடும்ப அட்டை, (v) வங்கிக் கணக்கு புத்தகத்தின் முதல் பக்கம் ஆகியவற்றில் ஏதேனும் இரண்டின் நகல்களை சுய சான்றொப்பமிட்டு விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். தவறும்பட்சத்தில் விண்ணப்பம் முற்றிலும் நிராகரிக்கப்படும்.

10. விண்ணப்ப படிவத்தின் குறிப்பிட்ட இடத்தில், விண்ணப்பதாரரின் கையொப்பம் இல்லாத விண்ணப்பங்கள் முற்றிலும் நிராகரிக்கப்படும்.

11. அனைத்து தகவல் பரிமாற்றங்களும், (தேர்வு/நேர்காணலுக்கான அழைப்பு/விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது) **www.districts.ecourts.gov.in/tn/namakkal** என்ற இணையதள வலைதளத்தில் மட்டுமே வெளியிடப்படும். வேறு எந்த வகையான முறையிலும் விண்ணப்பதாரருக்கு தனிப்பட்ட முறையில் தகவல்கள் தெரிவிக்கப்படமாட்டாது. எனவே, விண்ணப்பதாரர்கள் தொடர்ந்து மேற்கூரிய இணையதள வலைதளத்தை தொடர்ந்து கவனித்து தகவல்களை அறிந்து கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது.

12. பொய்யான வாக்குறிதிகளை சொல்லி, தவறான வழியில் வேலை வாங்கி தருவதாக கூறும் இடைத்தரகர்களிடம் விண்ணப்பதாரர்கள் மிகவும் கவனமாக இருக்குமாறு எச்சரிக்கப்படுகிறார்கள்.

13. இதுபோன்ற தவறான மற்றும் நேர்மையற்ற நபர்களால் விண்ணப்பதாரர்களுக்கு ஏற்படும் எந்தவொரு இழப்புக்கும் இந்நீதிமன்றம் பொறுப்பல்ல.

ஒம்/-K.H.இளவழகன்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
முதன்மை மாவட்ட நீதிமன்றம், நாமக்கல்.

இடம்: நாமக்கல்.
நாள்: 1.4.2019

# விண்ணப்ப படிவம்

விண்ணப்பதாரரின்
சுய சான்றொப்பத்துடன்
கூடிய பாஸ்போர்ட்
அளவு புகைப்படம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் | : | | | |
| | எந்த இனச்சுழற்சியின் கீழ் விண்ணப்பிக்கின்றீர் | : | | | |
| 2 | விண்ணப்பதாரரின் பெயர் (தமிழில்) (சான்றிதழ்களில் உள்ளபடி) | : | | | |
| | Name of the Applicant (in English) as per the Certificate | : | | | |
| 3 | தந்தை / கணவர் பெயர் | : | | | |
| 4 | பிறந்த தேதி | : | DD | MM | YYYY |
| | | | | | |
| 5 | பாலினம் | : | ஆண் / பெண் | | |
| 6 | 1) கல்வித்தகுதி (உரிய சான்றிதழ்கள் மற்றும் மாற்றுச் சான்றிதழ் நகல்கள் இணைக்கப்பட வேண்டும்) | : | | | |
| | 2)கூடுதல் தகுதிகள் (ஓட்டுநர், பிளம்பர், எலக்ட்ரீசியன், தட்டச்சர், சுருக்கெழுத்தர், கணிணி அறிவு) உரிய சான்றிதழ் நகல் இணைக்கப்பட வேண்டும் | : | | | |
| 7 | இனப்பிரிவு (சரியானவற்றை தேர்வு செய்யவும்) (சான்றிதழின் நகல் இணைக்கப்பட வேண்டும்) | : | (OC / BC / MBC / SC / SCA / ST) | | |
| 8 | ஜாதி (உட்பிரிவுடன்) | : | | | |
| 9 | தேசிய இனம் / மதம் (Nationality / Religion) | : | | | |
| 10 | பிறப்பிடம் (ஊர் மற்றும் மாவட்டம்) | : | | | |
| 11 | விண்ணப்பதாரர் திருமணமானவரா? | : | | | |
| 12 | நிரந்தர முகவரி | : | | | |
| 13 | முன் அனுபவம் (இருப்பின் உரிய சான்றிதழ்களின் நகல்கள் இணைக்கப்பட வேண்டும்) | : | | | |

| | | | |
|---|---|---|---|
| 14 | முன்னுரிமை கோருகிறீரா? ஆம் எனில் உரிய சான்றிதழின் நகல் இணைக்கப்பட வேண்டும்.<br><br>1. ஆதரவற்ற விதவை<br>2. உடல் ஊனமுற்றோர்<br>3. முன்னாள் இராணுவ வீரர் அல்லது முன்னாள் இராணுவ வீரரை சார்ந்தவர்<br>4. கலப்புத் திருமணம்<br>5. மற்றவை | :<br><br>:<br>:<br>:<br>:<br>: | |
| 15 | தமிழ் வழிக் கல்விக்காக முன்னுரிமை கோருகிறீரா?ஆம் எனில் PSTM சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும் | : | ஆம் / இல்லை |
| 16 | விண்ணப்பதாரர் ஏதேனும் குற்ற வழக்கில் தண்டணை பெற்றுள்ளாரா? | : | ஆம் / இல்லை |
| 17 | விண்ணப்பதாரரின் மீது குற்ற வழக்கு ஏதேனும் நிலுவையில் உள்ளதா? ஆம் எனில் அதன் விபரம் | : | ஆம் / இல்லை |
| 18 | இணைக்கப்பட்டுள்ள சான்றிதழ்களின் விபரம் | : | |

மேலே கூறிய தகவல்கள் அனைத்தும் உண்மை என உறுதி கூறுகிறேன்.

இடம்: விண்ணப்பதாரரின் கையொப்பம்

நாள்: